**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 90/மா/2023**

**நாள் : 30/08/2023**

திரு.A.மயிலேறும்பெருமாள்,
தூத்துக்குடி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி. – எதிர்மனுதாரர்

தூத்துக்குடி, கருப்புசாமி கோவில் எதிரில், நியூ காலனி மெயின் ரோடு, கதவு எண்.126/2E என்கிற முகவரியில் வசிக்கும் திரு.A.மயிலேறும்பெருமாள் என்பவரின் **27.03.2023** நாளிட்ட மனு **31.03.2023** அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, **90/மா/2023** என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி, கருப்புசாமி கோவில் எதிரில், நியூ காலனி மெயின் ரோடு, கதவு எண்.126/2E என்கிற முகவரியில் வசிக்கும் திரு.A. மயிலேறும்பெருமாள் அவர்கள் தனது **27.03.2023** நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி மாநகராட்சி டவுன் புல எண்.289/1 – " Ground Rent Natham" என்ற வகைப்பாடு நிலத்தில் பரப்பளவு **0.2136.0–ல் 100** ஆண்டுகளாக விநாயகர் கோவில் இருந்து வந்தது. தூத்துக்குடி டவுன் சர்வே ரிஜிஸ்டர் **16.09.2022–ல்** தூத்துக்குடி மாநகராட்சி நகர சார் ஆய்வாளர் (நில அளவை) அளித்துள்ள ஆவண நகலில் புல எண்.**289/1** – கீழ்கண்டபடி உட்பிரிவு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். புல எண்.289/1 Ground Rent Natham என்ற நில வகைப்பாட்டில் இருக்கிறது. கீழ்கண்டபடி உட்பிரிவு செய்யப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| 289/1A | 0.1918.0 | காலி இடம், தூத்துக்குடி நகராட்சி |
| 289/1B | 0.0218.0 | அருள்மிகு காந்தி விநாயகர் கோவில் |
| 289/1C | 0.2053.0 | மட்டப்பா கட்டிடம், தூத்துக்குடி நகராட்சி திருமண மண்டபம். |
| 289/1D | 0.6304.5 | ஓட்டு கட்டிடம், தூத்துக்குடி நகராட்சி நடுநிலைப்பள்ளி |
| 289/2A | 0.1662.5 | ஆஸ்பெஸ்டாஸ் கட்டிடம், முனிசிபல் சத்துணவு கட்டிடம். |

மேற்கண்ட புல எண்.289/1A. 289-1B–ல் கண்ட பரப்பளவு நிலம் முழுவதும் அருள்மிகு விநாயகர் கோவில் மற்றும் காலி இடம் கோவில் ஆன்மீக வழிபாட்டுக்காக – பொங்கலிடுதல், பால்குடம் எடுத்தல், பக்தர்கள் அமரும் இடம் ஆகியவற்றுக்கு பயன்பட்டு வந்தது. சுமார் 100 ஆண்டுகள் பழமையானது. 25.01.1934–ல் தேசப்பிதா மகாத்மா காந்தி கோவிலுக்கு வந்தார். அதன் பிறகு விநாயகர் கோவில் என்ற பெயர் காந்தி விநாயகர் கோவில் என்று மாற்றம் செய்யப்பட்டது. பழைய கோவில் சிதிலமடைந்து விட்டதால், கட்டிடம் புதுப்பிக்க கட்டுமானம் ஆரம்பித்த ஆண்டு 2013. கட்டுமானப்பணி முடிந்து கும்பாபிஷேகம் செய்த தேதி 29.04.2018. கோவிலின் கட்டுமானப்பணி நடந்த 5 ஆண்டுகளில் மாநகராட்சி ஆணையர்கள் எவரும் ஆட்சேபனையை தெரிவித்து நோட்டீஸ் கொடுக்கவில்லை.

88 ஆண்டுகளுக்கு மேலாக கோவில் ஆக்கிரமிப்பு பற்றி பதிவுகள் எதுவும் இல்லை. கோவில் ஆக்கிரமிப்பில் இருப்பதாக தூத்துக்குடி மாநகராட்சி நகர சார் ஆய்வாளர் (நில அளவை) பதிவு செய்த தேதி 05.01.2022. மாநகராட்சி ஆணையர் கோவில் ஆக்கிரமிப்பில் இருப்பதாக நோட்டீஸ் கொடுத்த தேதி 11.01.2022.

புல எண்.289/1A, 289/1B என்ற உட்பிரிவுகள் கீழ்கண்ட காரணங்களினால் சட்ட விரோதமானது.

(அ) உட்பிரிவு செய்ததற்கான ஆணை எண், தேதியை பதிவு செய்யவில்லை.

(ஆ) மேற்கண்ட நிலத்தை சுமார் 100 ஆண்டுகளாக அனுபவம் செய்து வந்த விநாயகர் கோவில் நிர்வாகிக்கு உட்பிரிவு செய்யும் போதும், உட்பிரிவு முடிந்த பிறகும் நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை. இந்த நெறிமுறைகளைப் பின்பற்றாமல் உட்பிரிவை உறுதி செய்வதற்கு சட்டம் அனுமதிக்கவில்லை.

(இ) கோவிலுக்கு வடபுறம், கீழ்புறம் காம்பவுண்டு சுவர். மேற்புறம், தென்புறம் தடுப்புகள், காம்பவுண்டு சுவரில் இந்து ஆகம விதிப்படி காவி, வெள்ளை அடித்து கோவில் அனுபவம் இருந்ததை புறக்கணித்து விட்டனர்.

(ஈ) நத்தம் நிலம், அதனை அனுபவம் செய்யும் மக்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றும், அரசு அலுவலர்கள் அதில் தலையிட உரிமை இல்லை என்றும் உயர்நீதிமன்றம் கீழ்கண்ட தீர்ப்பாணை வழங்கியிருக்கிறது. W.P. 18754/2005, 20304/2005, 2613/2005 Madras High Court, 04.11.2013 –

The Grama natham lands were classified and allotted for village people to use them as house sites or for any other purposes for storing his hay and manure or as a smithy or as a brick-Klin or as a place for weaving etc. The Government have no right to interfere with the peaceful possession and enjoyment of land.

மேற்கண்ட தீர்ப்பை முற்றிலும் புறக்கணித்து உட்பிரிவு செய்துள்ளனர்.

(உ) நகராட்சியின் எந்தவிதமான கட்டுமானம் அனுபவம் இல்லை என்று தெரிந்திருந்தும், காலி இடத்தை நகராட்சி பெயரில் பதிவு செய்வதற்கு நில அளவை சட்டம் அனுமதிக்கவில்லை.

(ஊ) புல எண்.289/1 – Ground Rent Natham என்ற வகைப்பாடுள்ள நிலத்தை தூத்துக்குடி மாநகராட்சி பெயருக்கு Transfer of classification of Land செய்வதற்கு Reveue Standing Order 23A –ன்படி ஆணை பிறப்பிக்கப்படவில்லை.

(எ) மேற்கண்டதைப்போன்று கீழத்திருச்செந்தூர் கிராமத்தில் எங்கள் சமுதாயத்திற்கு சொந்தமான நத்தம் வகைப்பாடு நிலத்தில் இருந்த கோவில் இடம் திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமானது என்று திருச்செந்தூர் நகராட்சி ஆணையர் போர்டு வைத்தார். கோவிலை காலி செய்யுமாறு நோட்டீஸ் கொடுத்தார். அதனை விசாரித்த தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் 28.09.2022ல் பிறப்பித்துள்ள கீழ்கண்ட ஆணையை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

As for the Temple Land in S.No.297/3 in an extent of 30 cents, the classification of the piece is Natham and the Municipality cannot claim title over the same and the Taluk Revenue authorities are the custodian of the land. Hence the Municipal Commissioner cannot do anything in the matter as the Municipality has no right to put up any board or cause inconvenience to the worshippers by way of blocking the entry or fencing or any other restrictions. The District Collector is instructed to ensure that the entire extent of the Temple area in 30 cents is free from any encroachment by any intruders or vested interests by issuing appropriate directions to the Revenue Divisional Officer, Thiruchendur and Thasildar.

மேற்கண்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தீர்ப்பாணையை உயர்நீதிமன்றம் மதுரை கிளை உறுதி செய்துள்ளது.

எண்.3763/2023 தேதி. 06.03.2023

"A perusal of the same shows that Survey No.,297/3 is classified as Natham. The land does not vest in the Government or in the Municipality and they have no title for the land. The fourth respondent namely the Municipal Commissioner is directed not to proceed further with the construction"

மாநகராட்சி ஆணையர் கொடுத்துள்ள 11.01.2022 நோட்டீஸ் தொடர்பாக மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் W.P. 21218/2022 தாக்கல் செய்யப்பட்டது. மனுவை நான்கு வாரத்தில் பரிசீலித்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் W.P.(M.D.) 21818/2022 dt. 16.11.2022ல் தீர்ப்பாணை வழங்கியுள்ளது. என்னுடைய W.P. மற்றும் 14.12.2022ல் நான் அளித்துள்ள கூடுதல் Representation ஆகியவை மீது ஆணையர் எந்த ஆணையும் பிறப்பிக்கவில்லை.

கீழ்க்கண்ட ஆவணங்கள் மேற்கண்ட பதிவுகளை நிரூபிக்கக்கூடியது ஆகும்.

(1) 25.01.1934-ல் தேசத்தந்தை மகாத்மா காந்தி விநாயகர் கோவிலுக்கு வருகை தந்தார் என்ற கட்டுரை.

(2) 50 ஆண்டுகளுக்கு மேலாக மின் இணைப்பு பெற்று அனுபவம் இருந்தது என்பதை நிரூபிக்கும் மின் இணைப்பு அட்டையின் நகல்.

(3) நத்தம் நிலத்தில் அனுபவம் செய்பவர்களை காலி செய்வதற்கு அரசு அலுவலர்களுக்கு அதிகாரம் இல்லை என்று வழங்கப்பட்டுள்ள கீழ்கண்ட தீர்ப்பாணைகளின் நகல்கள்.

(அ) Madras High Court, Chennai W.P.No.18754 of 2005, W.P.No.20304 of 2005, M.V.M.P. No.2013 of 2005 dt. 04.11.2013.

(ஆ) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தீர்ப்பாணை எண்.123/ந/2023 dt. 28.09.2022.

(இ) Revenue Standing Order 23A –ன் வழிமுறைகளின் நகல்.

(4) சுமார் 88 ஆண்டுகளுக்குப்பிறகு 05.01.2022ல் தான், ஆக்கிரமிப்பு பற்றி நில அளவர் பதிவு செய்துள்ளார் என்பதை நிரூபிக்கும் நில அளவைப்படம்.

(5) உயர்நீதிமன்றம் மதுரை கிளை தீர்ப்பாணை எண்.3763/2023 dt.06.03.2023

மேற்கூறிய காரணங்களினால், ஆணையரின் 11.01.2022 நோட்டீசை ரத்து செய்ய வேண்டும். தூத்துக்குடி மாநகராட்சி கட்டியுள்ள சுவரை நீக்க வேண்டும். மேற்கண்ட புல எண்.289/1, 289/1Bல் கண்ட நிலத்தை கோவிலுக்கு ஒப்படைத்து, பக்தர்கள் வழிபடுவதற்கு வசதி செய்து தரவேண்டும்" என தெரிவித்துள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 11.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3. தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது 19.07.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

சென்னை உயர்நீதிமன்ற மதுரை பெஞ்ச் கிளை W.P. (M.D.) No. 21218/2022 WMP (MD) No.15420/22 மற்றும் 15421/22 வழக்கு தீர்ப்பு நாள். 16.11.2022 தேதிய தீர்ப்பின்படி மனுதாரர் திரு.ஆ.மயிலேறும்பெருமாள் என்பவர் 14.12.2022 தேதியில் மாநகராட்சி ஆணையாளருக்கு மனு செய்தார். மேற்படி மனு பரிசீலனை செய்யப்பட்டு 20.03.2023 தேதியில் மனுதாரர் திரு.ஆ.மயிலேறும்பெருமாள் என்பவருக்கு பதில் விபரம் தெரிவிக்கப்பட்டது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெறும் நேரடி விசாரணைக்கு வருமாறு 14.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5. மனுதாரர் 21.08.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:**

" தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சி டவுன் புல எண்.289.1ல் பரப்பளவு 0.2136ல் காந்தி விநாயகர் கோவில் உள்ளது. 100 ஆண்டுகள் பழமையான இக்கோவிலில் பொங்கலிடுதல், பால்குடம் எடுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட கோவிலையும், அதன் சுற்றுப் பிரகாரத்தையும் மக்கள் வழிபட்டு வந்தனர். ஆனால் தூத்துக்குடி மாநகராட்சியினர் பொதுமக்கள் கோவிலை சுற்றி வராதவாறு கோவிலையொட்டி குறுக்கே சுவர் எழுப்பியுள்ளனர். இது குறித்து மாநகராட்சி அலுவலர்களிடம் கேட்டபோது மேற்கண்ட குறுக்கு சுவர் உள்ள இடம் மாநகராட்சிக்கு சொந்தமானது எனவும் அகற்ற இயலாது எனவும் தெரிவித்துள்ளனர். மேற்கண்ட இடம் கோவிலுக்குத்தான் சொந்தம். அங்கு விநாயகர் கோவில் கட்டப்பட்டு 100 ஆண்டுகள் பொதுமக்கள் வழிபட்டு வருகின்றனர்.

எனவே மேற்கண்ட விநாயகர் கோவிலை சுற்றி பொதுமக்கள் வழிபட அக்கோவிலில் தூத்துக்குடி மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள சுவரை அம்மாநகராட்சியே நீக்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. தூத்துக்குடி மாநகராட்சியின் உதவிப்பொறியாளர் மற்றும் நகர சார் ஆய்வாளர் இருவரும் 21.08.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர்:

" மனுதாரர் குறிப்பிட்டுள்ள கோவில் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.2 பிளாக் 8 பி நகரளவு எண்.289/1 முழுவதும் தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமாக இருந்தபட்சத்தில் தனியாக உட்பிரிவு செய்து 289/1Bல் கோவில் கட்டப்படாமல், 289/1A மாநகராட்சி இடத்தில் 36 சதுர மீட்டர் அதாவது 387 சதுர அடியில் விநாயகர் கோவில் கட்டியுள்ளனர். அக்கோவிலுக்கு மெயின் ரோட்டில் வழி உள்ளது. மேற்கண்ட கோவிலைத் தவிர்த்து, அதன் அருகே மாநகராட்சிக்கு சொந்தமான 289/1A பகுதி முழுவதையும் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் 17.08.2023 நாளிட்ட எதிர்வாதுரையில் கண்டுள்ள

விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்.

7. தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது 17.08.2023 நாளிட்ட எதிர்வாதுரையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகராட்சி டவுண் சர்வே வார்டு 2, பிளாக் 8 பி, நகரளவு 289/1 Ground Rent Natham என்ற வகைப்பாடு இடத்தில் பரப்பளவு 0.2166.0 நூறு ஆண்டுகளுக்கு மேலாக விநாயகர் கோவில் இருந்து வருகிறது என்பது தவறாகும்.

தூத்துக்குடி மாநகராட்சி டவுன் நகரளவு எண். 289/1 என்பது துணை நகரளவைக்கு முந்தைய ஆவணங்களில் சர்க்கார் புறம்போக்கு தூத்துக்குடி முனிசிபாலிட்டி எலிமெண்ட்ரி பள்ளிக்கு நிலமாற்றம் செய்யப்பட்டு, அப்போதைய நகராட்சி கட்டுப்பாட்டில் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டு பள்ளியாக உபயோகத்தில் இருந்து வருகிறது.

அதன் பின் துணை நகரளவை செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ள சர்வே ஆவணங்களில் 289/1A தூத்துக்குடி நகராட்சி, 289/1B, G.R. நத்தம் எனவும் குறிப்பு கலத்தில் மட்டும் அருள்மிகு காந்தி விநாயகர் கோவில் எனவும் உள்ளது. 289/1B.G.R.நத்தம் எனவும் குறிப்பு கலத்தில் அருள்மிகு விநாயகர் கோவில் என உள்ளதே தவிர அடங்கல் கலத்தில் கோவிலுக்கு பாத்தியமானது என பதிவு ஏதும் இல்லை. மேலும் மனுதாரரால் மேற்படி இடம் காந்தி விநாயகர் கோவிலுக்கு பாத்தியமானது என்பதற்கான பத்திர நகல் அல்லது வேறு ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.

முந்தைய சர்வே ஆவணங்களின்படி 289/1 முழுவதும் தூத்துக்குடி நகராட்சிக்கு சொந்தமாக இருந்தபட்சத்தில் கோவிலுக்கென தனியாக உட்பிரிவு செய்து 289/1Bல் கோவில் கட்டப்படாமல் 289/1A மாநகராட்சி இடத்தில் (4.3M + 2.2M) /2 x 11.2M ) = 36 ச.மீ. பரப்பளவு ஆக்கிரமித்து கோவில் கட்டப்பட்டு 29/04/2018ல் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது.

சர்வே எண். 289/1Bல் முழுவதும் கோவில் கட்டப்படாமல் ஒரு பகுதியில் மட்டும் கோவில் கட்டப்பட்டு ஏனைய பகுதிகள் காலியிடமாக உள்ளது.

தற்போது மாநகராட்சிக்கு சொந்தமான 289/1A பகுதி முழுவதும் பாதுகாக்கும் பொருட்டு 289/1Aல் சுற்று சுவர் எழுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் 289/1Aல் ஆக்கிரமிப்பாக (4.3M + 2.2 M)/2 x 11.2M ) = 36 ச.மீ. பரப்பளவிற்கு கோவில் கட்டியுள்ளார். டவுண் சர்வே எண்.289/1Aல் மாநகராட்சி அங்கன்வாடி, கழிப்பிடம் மற்றும் மண்ணெண்ணெய் பங்க் போன்றவை உபயோகத்தில் உள்ளது. மனுதாரர் கூறுவதுபோல் காலியிடமாக இல்லை.

மதுரை கிளை உயர்நீதிமன்ற வழக்கு W.P. 21218/2022 தீர்ப்பாணை நாள் 16.11.2022–ன்படி மற்றும் மனுதாரரது 14.12.2022 நாளிட்ட மனு தொடர்பாகவும் மனுதாரருக்கு உரிய விபரம் 20.02.2023ல் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சர்வே ஆவணங்களில் திருத்தங்கள் மற்றும் உட்பிரிவு நடவடிக்கைகள் அனைத்தும் சார் ஆட்சியர் தூத்துக்குடி அவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்" என தெரிவித்துள்ளார்.

7. இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம், தூத்துக்குடி மாநகராட்சி உதவிப்பொறியாளர் மற்றும் நகர சார் ஆய்வாளரின் வாக்குமூலம், ஆணையரின் அறிக்கை, எதிர்வாதுரை மற்றும் ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தனது மனுவில் தூத்துக்குடி மாநகராட்சி டவுன் புல எண்.289.1ல் 0.2136ல் காந்தி விநாயகர் கோவில் உள்ளது. 100 ஆண்டுகள் பழமையான இக்கோவிலில் பொங்கலிடுதல், பால்குடம் எடுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. கோவிலையும் அதன் சுற்றுப்பிரகாரத்தையும் மக்கள் வழிபட்டு வந்தனர். ஆனால் தூத்துக்குடி மாநகராட்சியினர் பொதுமக்கள் கோவிலை சுற்றி வாராதவாறு கோவிலையொட்டி குறுக்கே சுவர் எழுப்பியுள்ளனர். மாநகராட்சி அலுவலர்களிடம் கேட்டபோது மேற்கண்ட குறுக்கு சுவர் உள்ள இடம் மாநகராட்சிக்கு சொந்தமானது எனவே அகற்ற இயலாது என தெரிவித்துள்ளனர் என குறிப்பிட்டு தூத்துக்குடி மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள சுவரை மாநகராட்சி நீக்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சி டவுன் நகரளவு எண். 289/1 என்பது துணை நகரளவைக்கு முந்தைய ஆவணங்களில் சர்க்கார் புறம்போக்கு தூத்துக்குடி முனிசிபாலிட்டி எலிமெண்ட்ரி பள்ளிக்கு நிலமாற்றம் செய்யப்பட்டு, அப்போதைய நகராட்சி கட்டுப்பாட்டில் பள்ளி கட்டிடம் கட்டப்பட்டு பள்ளியாக உபயோகத்தில் இருந்துள்ளது. அதன் பின் துணை நகரளவை செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ள் சர்வே ஆவணங்களில் 289/1A தூத்துக்குடி நகராட்சி, 289/1B, G.R. நத்தம் எனவும் குறிப்பு கலத்தில் மட்டும் அருள்மிகு காந்தி விநாயகர் கோவில் எனவும் உள்ளது. 289/1B, G.R. நத்தம் எனவும் குறிப்பு கலத்தில் அருள்மிகு விநாயகர் கோவில் என உள்ளதே தவிர அடங்கல் கலத்தில் கோவிலுக்கு பாத்தியமானது என பதிவு ஏதும் இல்லை. மேலும் மனுதாரர் மேற்படி இடம் காந்தி விநாயகர் கோவிலுக்கு பாத்தியமானது என்பதற்கான பத்திர நகல் அல்லது வேறு ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.

முந்தைய சர்வே ஆவணங்களின்படி 289/1 முழுவதும் தூத்துக்குடி நகராட்சிக்கு சொந்தமாக இருந்தபோது கோவிலுக்கென தனியாக உட்பிரிவு செய்து 289/1Bல் கோவில் கட்டப்படாமல் 289/1A மாநகராட்சி இடத்தில் (4.3M + 2.2M)/2 x 11.2 M) = 36 ச.மீ. பரப்பளவு ஆக்கிரமித்து கோவில் கட்டப்படு 29.04.2018ல் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. சர்வே எண். 289/1Bல் முழுவதும் கோவில் கட்டப்படாமல் ஒரு பகுதியில் மடடும் கோவில் கட்டப்பட்டு ஏனைய பகுதிகள் காலியிடமாக உள்ளது. மாநகராட்சிக்கு சொந்தமான 289/1A பகுதி முழுவதும் பாதுகாக்கும் பொருட்டு 289/1Aல் சுற்று சுவர் எழுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் 289/1Aல் ஆக்கிரமிப்பாக (4.3M + 2.2M)/2 x 11.2 M) = 36 ச.மீ. பரப்பளவிற்கு கோவில் கட்டியுள்ளார். டவுன் சர்வே எண்.289/1Aல் மாநகராட்சி அங்கன்வாடி, கழிப்பிடம் மற்றும் மண்ணெண்ணெய் பங்க் போன்றவை உபயோகத்தில் உள்ளது. மனுதாரர் கூறுவத போல் காலியிடமாக இல்லை. மதுரை கிளை உயர் நீதிமன்ற வழக்கு W.P. 21218/2022 தீர்ப்பாணை நாள் 16.11.2022 மற்றும் மனுதாரரது 14.11.2022 மனுதாரருக்கும் உரிய அறிவிப்பு 24.02.2023ல் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் சர்வே ஆவணங்களில் திருத்தங்கள் மற்றும் உட்பிரிவு நடவடிக்கைகள் அனைத்தும் சார் ஆட்சியர் தூத்துக்குடி அவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும் என ஆணையாளர் தூத்துக்குடி மாநகராட்சி அவர்கள் தனது எதிர்வாதுரையில் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் மனுதாரர்

திரு.ஆ.மயிலேறும்பெருமாள், தூத்துக்குடி அவர்கள் சார் ஆட்சியர், தூத்துக்குடி அவர்களை அணுகி தகுந்த ஆதார ஆவணங்களை சமர்ப்பித்து தீர்வு பெற்றுக்கொள்ள மனுதாரரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2023–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு** அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.ஆ.மயிலேறும்பெருமாள்,
   த/பெ. ஆறுமுக நைனார்,
   கதவு எண்.126/2E,
   நியூ காலனி மெயின்ரோடு,
   கருப்பசாமி கோவில் எதிரில்,
   தூத்துக்குடி – **628 003.**

2. ஆணையர்,
   தூத்துக்குடி மாநகராட்சி,
   தூத்துக்குடி.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– **600 028.**

4. இணை இயக்குநர்,
   ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– **600 028.**

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்

11.9.23

8/8